Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 06 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம் 02 பெப்ரவரி (19 02 1991) செவ்வாய்க்கிழமை ஓசை 01

## நாய்களுக்கு விசர் ஏற்பட குண்டுச்சத்தமே காரணமாம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உள்ள நாய்கள் அண்மைக் காலங்களில் விசர்நாய்களாக பாறியமைக்கு சிறிலங்கா இராணுவ மற்றும் வான்தாக்குதல்களே காரணம் என்று மிருகவைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த பல மாதங்களாக வடபகுதியில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவ வான் படைகளின் தாக்குதல்களினால் சில பகுதி மக்கள் இடம் பெயர்ந்த சமயங்களில் நாய்களும் இடம் பெயர்ந்து (6 ஆம பக்கம் பார்க்க)

# பிரச்சினைகளைச் சமாளிக்க மத்திய அரசு தவறிவிட்டது!

## சந்திரசேகர் அரசாங்கம் மீது ராஜீவ் குற்றச்சாட்டு

(டில்லி)

**நாடு எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளையும் சமாளிக்க மத்திய அரசு தவறிவிட்டதாக காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி சந்திரசேகர் அரசாங்கம் மீது குறை கூறியுள்ளார்.**

மங்கல்தள் இளைஞர் மன்றம் புதுடில்லியில் ஏற்பாடு செய்த இரத்ததானம் முகாம் ஒன்றில பேசுகையில் மேற்கண்டவாறு கூறிய அவர் மேலும் பெற்றோல் பற்றாக் குறை, அவசியப்பண்டங்களின் விலை உயர்வும் சாதாரண மனிதனின் நிலைகளை வெகுவாகப் பாதிப்பதாகக் கூறினார்.

இதனிடையில் ஒரிசாவில் கோலாங்கீர் மாவட்டப்பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்யும் பிரதமர் சந்திரசேகர் நாட்டின் தற்போதைய நிலைமை தேர்தல் நடத்த உகந்ததல்ல என்றும், தேர்தல் நடத்தப்பட்டால் விரும்பத்தக்க விளைவு கிடைக்காது என்றும், எனினும் வருங்காலத்தில் நிகழவிருக்கும் சம்பவங்களைப் பொறுத்தும், பல்வேறு அரசியற் கட்சிகளின் போக்குக் குறித்தும் நிலைமை அமையும் என்றும் அவர் செய்தியாளரிடம் கூறினார். ஆனால் சிறுபான்மை பலத்தைக் கொண்டிருப்பதால் தேர்தல் பற்றி ஜனாதிபதியிடம் சிபாரிசு செய்யும் தனியுரிமை தம்மிடம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

## கட்டைக்காட்டிலும் குண்டுவீச்சு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கட்டைக்காடு என்னும் இடத்திலும் நேற்றுக் குண்டுவீச்சுத் தாக்குதல் இடம் பெற்றது. இத்தாக்குதலில்இரண்டுவிமானங்கள் ஈடுபட்டன நேற்றுக் காலை எட்டு மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதலின் போது இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. குறிப்பிடும்படியான சேதங்கள் ஏற்பட்டதாக தகவலில்லை.

## மக்கள் எதிர்க்கும் வரை பெற்றோல் வழங்கப்படும்
### -சந்திரசேகர்

(டில்லி)

வளைகுடாவிற்கு செல்லும் வழியிலும், திரும்பிவரும் வழியிலும் அமெரிக்காவின் இராணுவ மற்றும் போக்குவரத்து விமானங்களுக்கு இந்தியாவில தொடர்ந்தும் எரிபொருள் நிரப்பப்படுவதாக யு. என். ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இத்தகைய வசதிகள் நிறுத்கப்பட்டிருப்பதாக இந்தியப் பிரதமர் சந்திரசேகர் வெளியிட்டகூற்று தவறானது எனவும், தூரதர்ஷனை மேற்கோள் காட்டி (6ஆம் பக்கம் பார்க்க)

## 50 பேருடன் 100 நாட்கள்

(டில்லி)

சுமார் 50 அங்கத்தவர்களையே நாடாளுமன்றத்தில் கொண்டிருக்கும் சந்திரசேகரின் அரசு நூறு நாட்களை நேற்றுடன் நிறைவுசெய்துள்ளது இந்திய அரசியலில் இது பெரும் சாதனை என அரசியல் வல்லுனர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## வெருகல் அணைக்கட்டில் புலிகள் இராணுவம்மோதல்

(திருமலை)

திருமலை மாவட்ட அலிஒழுவ இராணுவ முகாமில் இருந்து நேற்று முன் தினம் புறப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் வெருகலில் தரித்து நிற்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை கல்லாறு இராணுவ முகாமில் இருந்து புறப் 6ஆம் பக்கம் பார்க்க)

## நானாட்டானில் ஒருவர் குண்டு வீச்சிற்குப் பலி

மன்னார் மாவட்டம் நானாட்டானில் நேற்று முன் தினம் மாலை 4 00 மணியளவில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் மூன்று தடவை குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

இத்தாக்குதலில் ஒருபொதுமகன் கொல்லப்பட்டார், ஒரு வீடும் சேதமடைந்தது.

## தமிழக சட்டசபைத் தேர்தல் அடுத்த மாதம் நிகழலாம்
### — சுப்பிரமணியம் சுவாமி

(சென்னை)

தமிழகத்தில் அடுத்த மாதமளவில் சட்டப் பேரவைக்கான தேர்தல்கள் நடைபெறக் கூடும் என்று மத்திய சட்டத்துறை மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் தேர்தல் குறித்தும். தமிழக சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்தும் தாம் தமிழக ஆளுநருடன் ஆலோசனை நடத்தியதாகக் கூறினார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் ஒரே குடும்பத்தில் நால்வர் ஷெல்லினால் காயம்

(காரைநகர்)

காரைநகரில் உள்ள சிறிலங்கா கடற்படை முகாமில் இருந்து குடிமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி கடற்படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்குபேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று நண்பகல் இம் முகாமில்இருந்து குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற் கொளளப்பட்டபோது சி. சீவரத்தினம் (வயது 40) என்பவரும் இவரது பிள்ளைகளான பிரதீபன் (வயது 8) என்பவர் காயமடைந்ததுடன் (6ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி ஷெல் தாக்குதலால் ஒருவர் மரணம்; மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாமில் இருந்து நேற்றுமுன்தினம் நள்ளிரவில் வடமராட்சிப் பகுதியை நோக்கி பலமான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஷெல்களில் அனேகமானவை ஊரிக்காடு, திருவில் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

திருவிலில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் சே. மணிவண்ணன் (வயது 22) என்பவர் மரணமடைந்தார்.

இவரது தாயாரான சிவரூபராணி செந்திவடிவேல் (வயது 52) என்பவரும், சகோதரியான யசோதா செந்திவடிவேல் (வயது 17) என்பவரும் (6ஆம் பக்கம் பார்க்க)

## இரு அதிகாரிகள் உட்பட 48படைபலி; ஒருவர்காணவில்லை; 10பேர்காயம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் கொண்டச்சி என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 48 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், ஒருவர் காணாமற்போயுள்ளதாகவும் சிறிலங்காபாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி நேற்றிரவு அறிவித்தது.

வெரித்தாஸ் வானொலி மேலும் தெரிவிக்கையில், கொல்லப்பட்டவர்களில் இருவர் அதிகாரிகள் எனவும் தெரிவித்தது. மேலும் இத்தாக்குதலில் பத்து இராணுவத் (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆண்டு 6 புலமைப்பரிசில் பரீட்சை மார்ச் 30இல்

(யாழ்ப்பாணம்)

மார்ச் மாதம் முப்பதாம் திகதி ஆண்டு ஆறுக்கான புலமைப்பரிசில் பரீட்சையும் அதனைத் தொடர்ந்து க.பொ.த. உயர்தர மற்றும் சாதாரண தர பரீட்சைகளை நடாத்துவதற்கு கல்வி அமைச்சு கொள்கை அளவில் இணக்கம் (6 ஆம் பக்கம் பார்க்க)

## அன்புடன் அழைக்கின்றோம்

உங்கள் அபிமானத்தைப்பெற்ற மக்கள் தினசரி 'ஈழநாதம்' இன்று முதலாண்டை நிறைவு செய்து இரண்டாம் ஆண்டினுள் அடியெடுத்துவைக்கிறது. இதனை முன்னிட்டு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துககல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறும் ஆய்வரங்கம், கலையரங்கம் ஆகிய நிகழ்வுகளில் கலந்து கொளள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''ஈழநாதம்'' பணியாளர்கள்

## இந்தியத் தூதுவராக கனகரத்தினா

இந்தியாவிற்கான புதிய தூதுவராக டேவிற் கனகரத்தினா தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

வேறும் சில நாடுகளின் தூதுவர்கள் மாற்றப்படவுள்ளனர் என்றும், அந்தஅமைச்சு அறிவித்தது. இதுவரை இலங்கைக்கான இந்தியத் தூதுவராக கடமையாற்றியவர் ஸ்டான்லி கல்பகே என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**வரி விளம்பரம்**

**பரீட்சை நூல்**

யாழ் பல்கலைக்கழக லிகிதர் / தொழில் நுட்பவியலாளர் பரீட்சைக்குரிய பொது உளச்சார்பு (CTQ) நூல் எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. ஆக்கியோன் கு. குணராசா M.A (R-1113)

**போட்டோஸ்ரட்**

பேட்டோஸ்ரட் பிரதிகளையும், ரோனியோ பிரதிகளையும், தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும், உடனடியாகப் பெற்றுக் கொள்ள "கிளீன் கட" 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (B1994)

**தோத்திரத் திரட்டு**

சைவத் திருநெறித் தோத்திரத் திரட்டு, (அகத்தியர் தேவாரத்திரட்டு, உமாபதிசிவாச்சாரியார் அருள் முறைத் திரட்டு உட்படப் பன்னிரு திருமுறைகளும் திருப்புகழ்ப் பாடல்களும் அடங்கியது) தொகுப்பு க. சி. குலரத்தினம் விலை ரூபா 25/- வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (B 2028)

## தீவுப்பகுதி விஜயம்

(ஊர்காவற்றுறை)

அரச சார்பற்ற பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் குழுவொன்று இன்று செவ்வாய்க்கிழமை (19-2-91) தீவுப் பகுதி கு விஜயம் பேற்கொண்டு இங்குள்ள அகதிமுகாம் களைப் பார்வையிடவுள்ளது.

அத்துடன் இக்குழுவினர் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, சரவணை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களையும் பார்வையிடவுள்ளனர். (15)

## 91 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

| தாயின் மடியில் | | தாய மண்ணில் |
|---|---|---|
| 11 | | 21 |
| - | | - |
| 10 | | 11 |
| - | | - |
| 1968 | | 1990 |



## லெப்டினனட் நேவில்

### (நடராசா நாகேஸ்வரன்)

(மாவிட்டபுரம் தச்சன் காட்டுச் சந்தியில் நடந்த நேரடி மோதலில் வீர மரணம் அடைந்தவர்.)

தேடித் தேடி எதிரிகளின்
பாசறைகள் பல நாடி
ஓடி ஓட துகளாக்கி
உருக்குலையச் செய்தவனே!
காலைப் பொழுதல் போதாகி
வேளை வருமுன் சருகாகி
நாளை மலரும் தமிழ் ஈழ
மண்ணுக்குரமாய ஆனவனே!
அச்செழுவன அருஞ் சுடரே
அடிமை விலங்கை உடைத்தெறியத்
தச்சன் காட்டுச் சந்தியிலே
உன் உயிரை தந்தவனே!
நாட்டுக்காக நகேஸ்வரன வீறு
கொண்டு லெப்டினன நெவிலாக
மாறி நின்று போரிட்டு
மண்ணின மானம காத்தாயே!
வாடி உற்றார் உறவினர்கள்
உற்றாக் கண்ணீர் வடிக்க
தேடும் நண்பரைப் பிரிந்து
தேவர் உலகம் சென்றாயே!

குறிப்பு :- அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 19-2-1991 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் இக்கிரியைகளிலு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு இயக்கத் தோழர்கள், தேழிகள், உற்றார் உறவினர்கள் அனைவரையும அன்புடன் அழைக்கின்றோம

அச்செழு, நீர்வேலி.

ஐயா, அம்மா, அண்ணா, தம்பிமார் தங்கை, உற்றார், உறவினர்கள் (R / 1116)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

| வேங்கையின் ஜனனம் | | வெற்றியில் மரணம் |
|---|---|---|
| 22 | | 22 |
| - | | - |
| 01 | | 11 |
| - | | - |
| 1972 | | 1990 |



வீர வேங்கை

## 2ஆம் லெப்ரினன்ட் சுபோ

### (கந்தையா சுமதி)

தமிழ்த் தீரம் மிகுந்து
பெரு வீரம் கொண்டு
வரிப் புலியாய் எழுந்து
மாங்குளந்தனில் மறைந்தவளே - சுமதி
உன் பாதச் சுவடடில்
பயணம் தொடரும்
நீ வீழ்ந்த இடத்தில்
விடியல பூக்கும

22. 11. 1990 அன்று மாங்குள இராணுவ முகாம் தகர்ப்பின்போது இவருடன் வீரமரணமடைந்த ஏனைய 62 வீர வேங்கைகளுக்கும் எமது இதய அஞ்சலிகள.

19 02 1991 செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம.

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர் R/1119

## முதலாவது ஆண்டை நிறைவு செய்யும் ஈழநாதத்திற்கு வாழ்த்துக்கள்!

# வாலாம்பிகா ரேடர்ஸ்

## 21/5 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ரி. வி., டெக், ரேடியோ, ரேப் றெக்கோடர், விளையாட்டுப் பொருள்கள், அலங்காரப் பொருள்கள், மின்சாரப் பொருள்கள் விற்பனையாளர்கள்.

(B/2033)

## நினைவு கூருகின்றோம்

## பெப்ரவரி 19

1986ஆம் ஆண்டு தெகிவத்தை, சிற்றாறுபகுதியில் ஆக்கிரமிப்பாளருக்கு, இராணுவத்திற்கும் பலத்தஉயிர்ச்சேதத்தை உண்டுபண்ணிய கண்ணி வெடித்தாக்குதலின பின் ஏற்பட்ட மோதலில் வீர மரணமடைந்த

**பெரியவன்** (வே. ஜீவராசா - கட்டைபறிச்சான்),

**ஆறுமுகம்** (ப. அற்புதம் - கிளிவெட்டி)

1988ஆம் ஆண்டு தேச விரோதிகளால் சுடடுக் கொல்லப்பட்ட

★ **பாபு** (சபாபதி பாலசிங்கம் - தங்கநகர்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடிவுக்கு தூரம் அதிகமில்லை
விடிவுக்கு முந்திய மணித்துளிகள்
பட்ட துயருக்கு அளவில்லை,
வெந்த புண்ணில் வேல்
வந்து பாய்ந்தது போல்
உங்களின் மரணச் செய்தி
எங்கள் காதுக்கு எட்டிய
காலையில் கண்ணீர் சொரிய
இலட்சியத்தை எட்டிப்பிடிக்க
கைகளை உயர்த்தி ஒன்றாய் சபதம் எடுத்தோம்
சத்தியம் செய்தோம் - அதனினால்
நீங்கள் எங்களில் வாழ்கிறீர்கள்.

★ மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மாவீரர் பாபு ஈரோஸ அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்ட மாவீரராவர்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி.

(B-2036)

# தூரம் அதிகம் இல்லை

## சிறுகதை

முதலாவது ஆண்டு நிறைவுப் போட்டியில் முதலாம் பரிசு பெறும் சிறுகதை இது.

எழுதியவர்: எஸ். கருணாகரன்
பிரதான வீதி, இயக்கச்சி.

உடல் வேல் முள் காலில் குத்தியது. அவசரமாகக் காலைத் தூக்கிக்கொண்டான் சேரன். தோளில் தொங்கிக் கொண்டிருந்த A. K. 47 ஐ கழற்றி மடியில் வைத்தபடி ஈரநிலத்தில் இருந்துகொண்டு முள்ளை இழுத்தெடுத்தான். அந்தப்பகுதி களிநிலமானபடியால் மழைநீர் சேறும் சகதியுமாக இருந்தது. சேற்றுக்குள் நடப்பதற்கு சிரமமாக இருக்கும் என்பதால் சப்பாத்தை கழற்றி வைத்துவிட்டு வெறுங்காலுடன் வந்திருந்தான். வெறுங்காலுடனே தண்ணீருக்குள் நின்றபடியால் காலின் ஈரப் பிடிப்பினூடு முள் ஆழமாகத் தைத்திருந்தது. முள்ளை இழுத்தபோது முள்ளின் முக்கால்வாசி வெளி வந்துவிட்டது. மிகுதி காலில் ஆழப்பதிந்திருந்தது. வலித்தது.

எழுந்து நடந்தான். இன்னும் மூன்று, நான்கு நிமிட நடை வரும், தங்கு நிலைக்கு போய்ச் சேருவதற்கு. அங்கு போனால் சைக்கிளில் பிரதான முகாமிற்குப் போகலாம்.

இரண்டு பக்கமும் உடல் வேல் முள்ளுப் பற்றைகளும், பறகுப்பாலை மரங்களுமான சிறுகாடு. ஊடே சிறிய பாதை. அதன் வழியாகவே இராணுவ முகாமை முற்றுகையிட்டிருக்கும் இவர்களின் காவலரணுக்குப் போகமுடியும். சேரன் அங்கிருந்துதான் வந்துகொண்டிருந்தான். உவர் நிலத்தின் மணம் அந்த இளங் காலையிலும் மணத்தது. சேரன் தங்கு நிலை முகாமிற்கு போய்க்கொண்டிருக்கும் வழியில், மாடுகளின் கூட்டமொன்று இராணுவ முகாம் பக்கமாக இவர்களின் காவலரண்களை நோக்கி போய்க் கொண்டிருப்பதைக் கண்டான். மாடுகள் அங்கு போனால் மிதிவெடிகளில் மிதித்து விடும். பின்னர், மாடுகள் மிதித்த தடயங்களின் வழியாக இராணுவம் வெளி வர முயற்சிக்கும் என்பதனால் அவற்றை மறித்துத் திருப்பித் துரத்தினான்.

போராட்டத்தில் ஒவ்வொரு நடவடிக்கையையும் மிக அவதானமாகவே கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதை நன்றாக உணர்ந்து கொண்டவன் சேரன். எந்த நடவடிக்கையையும் கவனிக்காமல் விட்டால் அவை பெரும் பலவீனமாகிவிடும் என்பதில் கவனமாக இருந்தான்.

தங்கு நிலைக்கு வந்து விட்டான். தோளில் தொங்கிக் கொண்டிருந்த துப்பாக்கியைக் கழற்றி பத்திரமாக ஓரத்தில் வைத்துவிட்டு அங்கு போடப்பட்டிருந்த மரக்குற்றியில் அமர்ந்தபடி:

''சதா, முன்னுக்கு நிற்கும் 'குறூப்'பை மாற்றிவிட வேணும். இரவு முழுக்க தண்ணீருக்குள் நின்று விறைத்துப் போனாங்கள்''. சதாவுக்கு கூறினான்.

சதா அந்த தங்கு நிலைக்குப் பொறுப்பாக இருந்தான்:

பிரதீப்பின்ர 'குறூப்' போகட்டுமன் அண்ணை''

''கெதியாகஅனுப்பிவிடும்'' என்றான் சேரன்.

பிரதீப்பின் அணி புறப்பட ஆயத்தமானது:

தங்குநிலை முகாம் எந்த நேரமும் சுறுசுறுப்பாக இருக்கும், காவல்அரண்கள் அமைக்கப் பயன்படும் சாக்குகள். மண்வெட்டி மற்றும் பொருள்களும் அங்கிருந்தன. ஆயுதங்களும், உணவுப் பொருள்களும் தேவைக்கேற்றபடி இருந்தன. இப்படி இரண்டு மூன்று தங்குநிலை முகாம்கள் வேறுவேறு இடங்களில் இருந்தன.

முன் காவல் அரண்களில் தண்ணீர் கழுத்துவரை நிறைந்திருந்தது. அந்த நிலைகளில்தான் இரவு முழுக்க விறைக்க விறைக்க காவல் நின்றார்கள். நீர் இறைக்க இறைக்க ஊற்றெடுத்தபடி இருந்தது. மிகவும் கஷ்டப்படவேண்டியதாயிற்று. அதனால் தரைமேல் அரண்களை அவசர அவசரமாக அமைக்க வேண்டியதாகவிருந்தது. எதிரியின் முன் என்பதனால் இரவிரவாகவே அவற்றைச் செய்தார்கள். ஒருபுறம் தண்ணீரும் சேறும். மறுபுறம் எதிரியின் தாக்குதல், இந்தவேளைகளில் சிலரை இழக்கவேண்டியிருந்தது. முந்தாநாளும் கணேசு பறிபோனான். எவ்வளவு குருதி சிந்தப்படுகிறது.

முன்னர் வீட்டில் என்றால் மழையில் நனைந்தாலோ, குளத்தில் குளிக்கப் போய் அதிக நேரம் ஊறிவிட்டு வந்தாலோ அம்மாவோ, அக்காவோ அக்கறையுடன் துவட்டி விடுவார்கள். இப்போது அதற்குள்ளேயே வாழ்க்கை, வாழ்வே ஒரு போராட்டம் ஆயிற்று.

தங்குநிலை முகாமில் அவரவர் தன் தன் பணியை செய்து கொண்டிருந்தனர். ஒரு பக்கத்தில் சயந்தனும் சுந்தரியும் துப்பாக்கிகளைச் சுத்தமீட்டுக் கொண்டிருந்தனர். ''வாக்கி டோக்கி'யில் சிறி தொடர்புகொண்டபடி இருந்தான்.

''இன்னும் இரண்டு 'வாட்டர் பம்ப்' எடுக்கவேணும் சதா. தண்ணீரை வெளியே அடித்துப்போட்டு மண் போட்டு சரிப்படுத்த வேணும். நேற்று எடுத்த பம்களை மாற்றிக் கொடுங்கோ'' என்றான் சேரன்.

''மற்றப் 'பம்ப்' எடுக்கும் வரையும் இருக்கிறதுகளாலை அடிப்பம் அண்ணை''

சிறி முன் 'பொயின்ற்'க்கு இரவு வேலைக்கு நேரத்தோடேயே 'ரைக்டர்'களில் சாமான்களை அனுப்பச் சொல்லுங்கோ. அங்கே, ஆனந்தனிடம் சொல்லும். 'ஆக்களையும் இன்றைக்கு கூடுதலாக அனுப்பி வைக்கட்டாம் என்று' பிரதான முகாமிற்கு 'வாக்கி டோக்கி' மூலமாக அறிவிக்கும்படி சிறியிடம் கூறினான் சேரன்.

இந்தச் சின்ன வயதிலேயே எவ்வளவு கஷ்டப்படவேண்டியுள்ளது. படிக்கவேண்டிய, வாழ்வின் சுமையை உணர முடியாத இந்தச் சின்ன வயதில் எவ்வளவு பொறுப்புணர்வுகளுடன் ஆபத்துகளிலும் வேலை செய்ய வேண்டியுள்ளது. முன்பு அவன் அப்பாவுடன் வயலுக்கு உதவியாகப் போய் வந்த அந்த வயதில் இங்கு இவர்கள் இராணுவத்தை முகாமிற்குள் அடக்கி வைத்திருக்கிறார்கள் என சேரன் நினைத்தான்.

தங்குநிலைமுகாமிற்கு மேற்குப் புறத்தில் இருந்த வயல் வெளியைப் பார்த்தான். விதைக்கப்படாமல் தரிசாகக் கிடந்தது. வரம்புகள் அழிந்தும், அழியாமலும் ஐந்து ஆறு வருடங்களாக அங்கு விதைப்பு நடக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. இரண்டு பக்கமும் உடல் வேல் முள்பற்றைகளிருக்க கிழக்கு மேற்காக கண்ணுக்கெட்டிய தூரம்வரை வயல்வெளி தெரிந்தது. இராணுவத்தின் தாக்குதல் குறிகள் அங்கு என்பதால் விதைக்க முடியவில்லை.

குடியிருப்புக்கள் அவ்விடத்திலிருந்து ஒருமைல் தூரத்தில் தான் இருந்தது. மற்றப்படி சிறு பற்றைகளும் உவர் வெளிகளும் தான். பள்ளமான இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றது.

அங்கு எல்லோரும் ஒருவித உறவில் பிணைந்திருந்தனர். கட்டுப்பாடும்ஒழுக்கமும்அவர்களின் நடத்தையில் தெரிந்தது: முன்னர் வேட்டை தெரிந்தவன் குறிதவறாது வெடி வைப்பவன் என்றால் ஊரில் அவனின் திறமையை சுவைபடக் கூறுவார்கள். ஆனால் இப்போது இங்கே தமது இனத்தின் விடுதலைக்காக புதிய ஆயுதங்களுடன் அவர்கள் பரிச்சியப்பட்டுக் கொண்டுள்ளார்கள்.

சேரன் எல்லா ஒழுங்குகளையும் செய்துவிட்டு அங்கிருந்து அடுத்த முகாமிற்குப் புறப்பட்டான்: அனேகமாக அவன் தனியாகவே அடுத்தடுத்த முகாம்களுக்குப் போவது வழக்கம். நடந்து அல்லது சைக்கிளில் செல்வான். இப்போது நடந்தேசென்றுகொண்டிருந்தான்.

எதிரே இன்னொரு தோழன் வந்து கொண்டிருந்தான். இவனருகில் வந்தவுடன், சைக்கிளை நிறுத்தி

சேரண்ணை! ''வாட்டர் பம்ப்'' ஓரிடத்தில் இருக்குது. ஆனால் அந்த மனுசன் 'பம்ப், பிழைச்சுப் போச்சுது என்று சுத்துது அண்ணை. நாங்கள் நேற்றுக்கண்டனாங்கள். வாடகைக்கு கிணறு இறைத்துப் போட்டு'பம்ப்'மைக் கொண்டு போனவர்' என்று சேரனிடம் கூறினான்.

சேரன் சிறிது நேரம் மௌனமாக நின்றான். 'நாங்கள் இரவு பகலாக தண்ணீருக்குள்ளை காவல் நிற்கிறம். சில வேளைகளில் இரண்டு நாட்களுக்கும் வேறு உடை மாற்றமுடியாமல் நிற்கவேண்டியுள்ளது. சாப்பாடுகூட சாப்பிட முடியாத அளவுக்கு நிலைமை இருக்கும். இதையெல்லாம் தெரிந்துகொண்டும் இந்த மனிசர் இப்படி நடக்கிறார்கள் என நினைக்கும் போது வலித்தது.

சற்றுமுன்னர் உடல் வேல் முள் குத்தியதைவிடவும் இப்போது வலித்தது.

எதிரியின் குண்டு துளைக்கும் வலியை விடவும் இது வலித்தது.

'பரவாயில்லை. இன்னொரு இடத்தைப் பார்ப்பம். வேறு யாரிட்டையாவது கேட்டுப் பாருங்கோ. இரண்டு நாளில் திருப்பித் தருவம் என்று சொல்லுங்கோ' என்று பதில் கூறினான் சேரன்.

அந்தத் தோழன் அனுபவத்தை தெரிந்து கொண்டிருப்பான்,

அவனை அனுப்பிவிட்டு இவன் நடந்தான். குடியிருப்புக்கு வந்துவிட்டான். சனங்கள் மிகவும் குறைவாக இருந்தார்கள். முகாமிற்கு மிகவும் அண்டிய குடியிருப்பு அதுதான். அதனால் அது அப்படி இருந்தது. இடையிடை தாக்குதலும் நிகழ்வது.

''.. வவுனியாவில பிடித்து உள்ளுக்குப் போடுறாங்களாம்...''

''...'ஆமி'யின்ரை அட்டகாசம் தாங்கேலாது மச்சான். இரண்டு பேரைச் சுட்டுப் போட்டுக் கிடக்குதெண்டு என்ர 'பிரண்ட்' சொன்னாரப்பா...''

''இரவுக்கிடையில ஓமந்தைக்குப் போயிடலாம் என்ன?...''

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடைசித் தூது

இப்பொழுது தான் நான்
எரிந்து கொண்டிருக்கிறேன்
சிவப்பாய் ... மஞ்சளாய்...
தீயின் நாக்குகளில்
சாம்பலாகிப் போவது
உடல் மட்டுந் தான்...

புகையோடு கலந்த
காற்றே...
கடைசித் தடவையாக
உன்னிடம்
கெஞ்சுகிறேன்


என் பிரிய
காதலியிடம் சொல்லு...
அவளின் தழுவலுக்காக
என் துப்பாக்கி
காத்திருக்கின்றதென்று...

துயரத்தில் தோய்ந்திருக்கும்
அம்மாவிடம் சொல்லு...
இந்த மண்ணுக்காகச்
சாம்பலான உன் மகன்
ஆயிரமாயிரமாய்
மீண்டும் உயிர்ப்பானென்று...

நாளை விமானமேறவிருக்கும்
என் நண்பனிடம் சொல்லு...
தேம்ஸும்...
நயாகராவும்...
அதிகாலைப் பனி படர்ந்த
எங்கள் கிணற்று நீருக்கு
ஒப்பாகாதென்று...

முதலாவது ஆண்டு நிறைவுப் போட்டியில் முதல் பரிசு பெறும் கவிதை இது. எழுதியவர்:

செல்வி நாமகள் பசுபதிப்பிள்ளை
154/8, சீ, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.




முதலாவது ஆண்டு நிறைவுப் போட்டியில் முதலாம் பரிசுபெறும் கருத்துப் படம் இது.

ஓவியம்: இ. ஞானேந்திரன்
கோவளம், காரைநகர்.

# சிறப்புற அமைய வாழ்த்துக்கள்

வடமாகாணத்தில் வெளிவரும் நான்கு தினசரிப் பத்திரிகைகளில் ஈழநாதத்தின் பங்கும் பணியும் அளப்பரியது. அடக்கப்பட்டு, உரிமைகள் பறிக்கப்பட்டு இருக்கும் எமது தமிழீழ மக்களின் உணர்வலைகளை புடம்போட்டு காட்டியதில்ஈழநாதத்தின் பங்கு அளப்பரியது. இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் நாதமகளுக்கு மேலும் புதுப்பொலிவுடன் வாழ்த்துக்கூறி தொடர்கின்றேன் எனது விமர்சனத்தை.

ஆரம்பத்தில் ஞாயிறு மலராக வந்த வாரமலர் பின் வெள்ளி மஞ்சரியாக இடம் பெற்றது. இதில் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பார்த்து அறியக்கூடியதாக இருந்தது. போராளியின் நினைவுகூறும் களநிகழ்வுகளும் தளநினைவும், தமிழீழத்தில் நடக்கும் ஊழல்களாக இருந்தாலும் குறைகளாக இருந்தாலும் அவற்றை வெளிக்காட்டுவதற்கான சம்பாஷணை வடிவில் மதவடியும், ஆங்காங்கு நடக்கும் சம்பவங்களை இலக்கிய சுவைநயத்துடன் விளக்கும் இலக்கிய தடமும், அதுபோல் தமிழீழ மண்ணில் இந்தியா தன் ஆக்கிரமிப்பாளர் செய்த அட்டூழியங்கள், எமது இளைஞர்கள் சிறையில்பட்ட அனுபவங்களை மக்களுக்கு வெளிக்கொணரும் விதமாக ''சிறைப்படாத சிந்தனையும்'' ஆங்காங்கே வாரத்தின் சாரம் அதாவது சாறு பிழிந்து தரும் நிகழ்வாக வாரசாரமும் இடம் பெற்றது. இதில் பல்வேறு விடயங்களையும் வாசகர்கள் அறிந்துணர்வதற்கு இந்த வெள்ளி மஞ்சரி உதவியது. ஆனால் இசனை தொடர்ந்து வாசிக்க முடியாமல் (பேப்பர் தட்டுப்பாடு) போனது வாசகர்களின் துர்ரதிஷ்ட நிகழ்வே.

தினசரியை எடுத்துக்கொண்டால் அறிவை வளர்ப்பதற்கு மேலும் அதனை தூண்டுவதற்கு தினசரியில் வந்த பொருளடக்கம்சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்தது.

நசுக்கப்படும் மக்களின் உரிமைக் குரலாக தொனிப்பதற்கு ஈழநாதத்தில் வெளிவந்த அரசியல் கட்டுரைகளை உதாரணமாக கொள்ளலாம். தென்னாபிரிக்க விடுதலை வீரன் நெல்சன் மண்டேலா படத்துடன் அந்த நாட்டில் விடுதலை உணர்வினையும் வெள்ளையின மக்களின் கொடுமைகள் பற்றியும் வெளிவந்த கட்டுரைகள், அதுபோல் பலஸ்தீன மக்களின் காஸா பகுதி கரையோர மக்கள் படும் துயரம், வேதனை அதோடு ஒப்பிட்டு தமிழீழ மக்களில் குறிப்பாக திருமலை கரையோர மக்களுடன் ஒப்பிட்டு எழுதிய கட்டுரைகள் மிகவும் அறிவுக்கு விருந்தாகவே இருந்தன. இதுபோன்றே பல்வேறு கட்டுரைகளும் ஆங்காங்கே அமைந்திருந்தன.

மருத்துவக் கட்டுரைகள் உளவியல் கட்டுரைகள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவுக்கு இல்லாவிட்டாலும் வெளிவந்த கட்டுரைகள் நன்றாகவே அமைந்திருந்தன

ஆசிரியர் பகுதி ஆசிரியர் தான் கூறவந்த கருத்தை அடித்துச் சொல்வதிலும் எங்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அவற்றை வெளிச்சத்துக்குகொண்டுவந்துமக்கள் முன்திறுத்துவதில் ஈழநாதம் முன்னின்று உழைத்ததே என்று கூறலாம். மாநகர சபை விடயமாக இருந்தாலென்ன, கச்சேரி விடயமாக இருந்தாலென்ன தமிழீழத்தில் நடக்கும் எந்த ஊழல்களாக இருந்தாலென்ன தமிழீழம் சம்பந்தமான இந்தியாவின் நிலைப்பாடாக இருந்தாலென்ன அவற்றை அடித்துக் கூறி தீர்வு கூறுவதில் ஈழநாதம் என்றும் நிமிர்ந்தே நின்றது என்று கூறலாம். நிறுவனங்கள் நேர்மையுடன் பங்காற்றுவதற்கும் அதாவது ஊழலற்ற ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்புதவற்கும்உறுதுணையாக இருந்ததில் ஈழநாதத்தின் பங்கு அளப்பரியது என்று கூறினால் மிகையாகாது.

ஈழநாதத்தில் வெளிவந்த கருத்துப்படங்கள் சிரிக்கவைக்கும் அதே நேரம் சிந்திக்கவைக்கும் கருத்துக்களைக் கொண்ட படங்களாக அமைவதைக் காணலாம். உதாரணமாக அண்மையில் கருணாநிதியின் ஆட்சி கவிழ்ப்பைமையமாக வைத்து கருணாநிதி தூக்கில் தொங்கும் படம், யாழ். மக்களுக்கு உணவுப் பொட்டலம், (குண்டு போடுதல்), வரதராஜப்பெருமாள் நாட்டைவிட்டு காட்டுக்கு ஓடியதாக சித்தரிக்கப்படும் கருத்துப் படங்கள், ரஞ்சனைக் கேலிபண்ணும் கருத்துப்படங்கள் மனதைக் கவர்ந்தன.

அடுத்து ஈழநாதத்தில்வெளிவந்த 'உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்' என்ற பயணக் கட்டுரை தென் தமிழீழ மக்கள் படும் துயரங்களை எங்கள் மனக்கண்முன் நிறுத்தியுள்ளார். இக்கட்டுரை ஒன்றே தென் தமிழீழ மக்களுக்கு யாழ். தமிழீழ மக்கள் நிதியுதவி அளிப்பதற்கு சான்றுபகரும் கட்டுரையாக அமைந்தது என்று கூறினால். மிகையாகாது. இத்துடன் இணைந்த கருத்துப்பட Blokcக்கும் நன்றாகவே அமைந்திருந்தது.

இதுபோன்று வடமராட்சியில், வல்வெட்டித்துறையில் சிறிலங்காவின் இராணுவத்தின் குண்டுவீச்சுத் தாக்குதல் மத்தியிலும் மக்கள் தமிழீழம் ஒன்றினாலேயே நாம் நிம்மதியாக வாழ்வோம் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில் தொடர்ந்து தமதுஇடிந்து உடைந்துபோன வீடுகளுக்கு மீண்டும் நகர்வதனை, உடைந்தவீட்டில் உடையாத உள்ளமாக தந்தார் கதாசிரியர்.

ஆங்காங்கே சில தலையங்கள் சிரிக்க வைக்கும் தலையங்கமாக வந்தமையையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அதாவது கட்டாக்காலி நாய்கள் சுற்றி வளைப்புக் குள்ளாமை, ஒட்டையடைக்கும் நேரத்தில் ஓடிவிட்ட மின்சாரம் முதலிய சிரிக்க வைக்கும் செய்தியாக அமைந்தன.

தமிழீழ மண்ணில் ஆனி மாதம் மீண்டும் போராட்டம் தொடங்கிவிட்ட பின் தமிழீழ மக்களுக்கு அறிவுறுத்தலையும் மக்கள் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதில் தீர்க்க தரிசனத்துடன் பல செய்திகளை வெளியிட்டுயிருந்தது. அதாவது உள்ளூர் உற்பத்திச் செய்கை கூடுதலாக மேற்கொள்ளல் எரிபொருள் மீதப்படுத்தல் றூட் நிறுவனத்தின் ஆய்வுக் கட்டுரைகள் பலவும் தமிழீழ மக்கள் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் ஈழநாதத்தில் நாம் பார்த்தோம். இது வாசகர்கள் அனைவருக்கும் முன் கூட்டி எச்சரிக்கையாக நடப்பதற்கு உதவியது என்று கூறினால் மிகையாகாது.

இதனை விட சிறப்பிதழ்களாக மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பு,தச்சன்காட்டு இராணுவ முகாம் தகர்ப்பு கோட்டையில் புலிக்கொடி ஏற்றியமை போன்ற விசேட பதிப்பு இதழ்கள் போராளியின் இன்னல்களையும் அந்த இன்னல்களுக்கு மத்தியில் அவர்கள் வெற்றி கொண்ட விதமும் தனக்கே உரித்தான வீறு நடையுடன் செய்திகளை அள்ளித் தந்த பெருமை ஈழநாதத்துக்கே உரியதாகும்.

இவ்வாறு பல்வேறு நிறைவுகளை ஈழநாதம் தந்திருந்த போதும் குறைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

தமிழீழ மாணவர்களின் கல்வியை சீரழித்தலில் அதாவது சுய அறிவாற்றலை சிதைத்ததில் தனியார் கல்வி நிறுவனத்துக்கும் பங்கு உண்டு. இது அவ்வப்போது பத்திரிகைகளிலும் விவாத அரங்குகளிலும் விவாதிக்கப்பட்ட ஒரு கசப்பான உண்மை. ஆனால் கல்வி நிறுவனங்களுக்கு ஊக்கமளிப்பது போல்ஈழநாதத்தில் வந்த விளம்பரங்கள் அமைந்திருந்தன. அதாவது ''தனித்துவம் வாய்ந்த கல்வி நிறுவனம் எமதே ஆசனங்களை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்'' என்று ஒரு தனியார் கல்வி நிறுவனத்தின் விளம்பரம் ஈழநாதத்தில் பார்த்தேன் இது போன்று பல தனியார் நிறுவனங்களின் விளம்பரங்களுக்கு வடிகால் தேடிக் கொடுப்பதாக ஈழநாதப் பத்திரிகை அமைந்து விட்டது. இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்றே கருதக் கிடக்கிறது.

பெண்களும் போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டும். பெண்களுக்கு தமிழீழத்தில் பங்குண்டு என்று கோரும் தமிழீழ மண்ணில் ஈழநாதத்தில் மாதர்களுக்கு என்று ஒதுக்கிய பகுதியில் வெளிவந்த கட்டுரைகள் விரல் விட்டு எண்ணக் கூடியளவுக்கும் இல்லை என்றே கூறலாம். ஆகவே பெண்களின் பல் வேறு பிரச்சினைக்கும் முகம் கொடுப்பதற்கு ஈழநாதத்தில் ஒரு பகுதியைச் சேர்த்தால் மிகவும் நன்றாவே அமையும் என்பதில் ஐயமில்லை.

எழுத்துப் பிழைகள் ஆங்காங்கே இடம் பெற்று வருவது அவதானிக்கப்படலாம் இவை கருத்துச் சிதைவு ஏற்படுத்துவதையும் வேறு அர்த்தங்களை தந்தமையையும் நீங்களும் அறிந்திருப்பீர்கள். இவை அனைத்தும் தவிர்க்கப்பட வேண்டியவையாகும்.

விளம்பரங்களை பொறுத்தவரையும் பத்திரிகைகள் தட்டுப்பாடன் இக்காலகட்டத்தில் (4 பக்கம் தற்சமயம் வருகிறது) சேவை நோக்கத்தைக் குறிக்கோளாகக் கொட்டும் ஈழநாதம் குறுகிய அந்த நாலு பக்கத்திற்கும் கூடுதலான செய்திகளையே வாசகர்கள் வாசிக்க விரும்புவார்கள். ஆனால் ஒரு பக்கத்தில் அதாவது 2 ஆம் பக்கம் முழுவதும் விளம்பரமாக உள்ளது. இதை தவிர்த்து செய்திகளாக இருந்தால் மக்களுக்கு மேலும் படிப்பதற்கு ஆவலை ஏற்படுத்துவதாக அமையும்.

மாணவர்கள் என்ற பகுதியில் இரசாயனம் என்ற ஒரு பாடத்திற்கான வினாவிடையே வந்தன. இது போல் ஏனையபாடங்களுக்கும்மாணவர்களுக்குரிய கட்டுரைகள் அமைந்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

முடிவாக தொகுத்து நோக்கும் போது எந்த இடர்பாடுகளுக்கும் மத்தியிலும் ஒரு நாள் கூட தவறாமல் தொடர்ந்து பணிசெய்து இதழ்வெளிவந்தமைக்காக வாசகராகிய நான் நன்றி கூறுகிறேன்.

இதில் வந்த செய்திகள் அனைத்தும் என் நோக்கின் கணிப்பீடுகளே தவிர வேறு யாருடையதும் அல்ல. இதில் ஏதாவது தவறுதல் இருந்தால் அதை மன்னித்து தொடர்ந்து வாசிக்கவும் என்று கூறி மீண்டும் ஈழநாதத்தின் சேவை சிறப்புற அமைய வாழ்த்துக்கள் கூறி முடிக்கின்றேன்எனது வீமர்சனத்தை. ★

நன்றி

முதலாவது ஆண்டு நிறைவின் போது கிடைக்கப் பெற்ற வாசகர்களின் விமர்சனக் கடிதங்களில் தகுதி பெற்ற கடிதம் இங்கு பிரசுரமாகிறது.

எழுதியவர் **கந்தையா ராகினி**
மக்கள் பிரசுராலயம்
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

## தூரம்...

சைக்கிளில் பாரத்தை, பயணப் பைகளைக் கட்டிய படி சென்று கொண்டிருந்தவர்கள் கதைத்துக் கொண்டுபோனார்கள். அவர்கள் வவுனியாவுக்கு, அல்லது கொழும்புக்குப்போகிறார்கள் என்பதை அனுமானித்துக் கொண்டான் சேரன்.

அண்மையில் வெடிகுண்டு வெடித்த மணம் மணத்தது.

நேற்று மாலை விமானங்கள் இங்குதான் குண்டு வீசியுள்ளன என்பதை உணரமுடிந்தது. குறிதவறி வீசப்பட்ட குண்டு அவ்விடத்தில் விழுந்து வெடித்திருந்தது. பெரிய அளவில் சேதங்களில்லை. மரங்கள் முறிந்து இலைகளும் மண்ணும் வெடிமருந்துடன் அவிந்த மணம். கவனித்தபடி நடந்தான்.

அடுத்த குண்டு - அருகிருந்த வளவில் விழுந்த அடையாளம் செழிந்திருந்த குரக்கன் பயிர்களின் ஒரு பக்கமாக வேலியின் அருகில்.

ஒரு பக்க வேலி முற்றாக இல்லை. அருகிருந்த குரக்கன் பயிர்களில் ஒருபகுதி மண்ணுடன் சிலும்பி அழிந்து போயிருந்தன. மனதில் நெருடியது.

எனினும், வேலியை மீளவும் புதிதாக அடைத்துக் கொண்டிருந்தார்கள் அந்த வீட்டுக்காரரும் ஒரு சிறுவனும். அவர்கள் சேரனைக் கண்டதும்,

''என்ன தம்பி நடந்து வாறியள்? சைக்கிள் நிற்குது. கொண்டு போங்கோ. பிறகு அனுப்பி விடுங்கோவன்.'' என்றார் அவர்.

தன்னுடைய வளவில், பயிர்கள் அழிந்து போயிருக்கையிலும், தான்நடந்து வருவதைப் பார்த்தவுடன் உதவ முன்வந்ததை நினைத்தான் சேரன்.

''இல்லை. பரவாயில்லையண்ணை! இனிப்பக்கத்திலதானே' அங்க சைக்கிள் நிற்குது' திரும்பி சைக்கிள்ள வரலாம். அது சரி இதில ஆரை இருக்குதென்று அடிச்சவங்கள்?''

சிறுவன் சேரனை ஆவலுடன் பார்த்தான்.

''தம்பி அவனுக்கு கென்ன? நாங்கள் தமிழர். அதுதான் இலக்கு''

அவரைக் கூர்ந்து பார்த்தான் சேரன். கொடுமை எப்படியெல்லாமோ.

'' முரளி: அண்ணனைக் கொண்டுபோய் விட்டிட்டுவா. வீட்டை சைக்கிளையும் எடுத்துக் கொண்டு அம்மாவிடம் கேட்டு கைபிடிப் பையிலை வாழைப்பழங்களையும் வாங்கிவா. அதையும் சேரண்ணையிடம் கொடுத்துவிடு.'' தன்மகனைப்பார்த்துக் கூறினார் அந்த வீட்டுக்காரர்.

சேரன் வளவினுள் பார்த்தான். அழிந்தது போக மிகுதியாயிருந்த குரங்கன் பயிர்கள் வெடிமணத்திலும், மண் அதிர்விலும் கிறங்கா திருந்தன. அவற்றைப் பாதுகாக்க புதிய எல்லை போடப்பட்டுக் கொண்டிருந்தது.

சிறுவன் வாழைப்பழப்பையுடன், சைக்கிளைக் கொண்டு வந்தான்.

''வாறமண்ணை''

சேரன் புதிய நினைவுகளுடன் புறப்பட்டான். கூடவே சிறுவனும்.

## 60 ஆம் நாள் நினைவஞ்சலி

ஜனனம் 06 - 04 - 1968



வீரமரணம் 22 - 2 - 1990

### கப்டன் ஆஷா

**(நடராசா பத்மாவதி . கலா)**

(கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணம்)

எங்களின் குடும்பத்தில்
நீங்கள் பிறந்ததால்
நாங்கள் பெருமை கொண்டோம்.
இந்த மண்ணின் விடுதலைக்கு
வெங்களத்தில் நின்று
வீரமுடன் போராடிய சேதி
செவிகளில் பாய்ந்த போது
விழிகளில் நீர் சொட்டியது
ஆனந்த மேலீட்டால்
விதியின் வழியில் வீரமரணம்
என்ற போது.
தாங்கொணா வேதனையில்
துவண்ட போதும் - நீர்
சென்ற பாதையில் - எம்
பாதங்களின் பயணம்......

(B-2034) - பெற்றோர், உறவினர்

## ❀ சிந்தனைக்கு ❀

கடந்த காலத்தை நீ அறிந்தால் ஒழிய, நிகழ்காலத்தின் உண்மை உணர்வையோ, வருங்காலத்தின் குறிக்கோள்களையோ அறிவது அரிது.

- மாக்ஸிம் கோர்க்கி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 19-02 91
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# ஒரு வருட பணியில் ஈழநாதம்

1990 இல் இந்திய இராணுவம் தமிழர் தாயகத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கையில், ஏற்பட்ட அரசியல் மாற்றத்துடன் வெளிவரத்தொடங்கிய ஈழநாதம் இன்று தனது ஒரு வயதைப் பூர்த்தி செய்கின்றது.

ஈழநாதம் ஒரு நாளாந்தச் செய்திப் பத்திரிகையாக இருப்பினும் அதன் இலக்கு பல்வேறுபட்ட செய்திகளை மக்களுக்குக் கொடுப்பது மட்டுமல்ல அதற்கும் மேலாக அடக்கப்படும் மக்களின் குரலாக ஒலிப்பதே அதன் பிரதான இலக்காகும் மேலும் தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார விடுதலையையும் முன்னேற்றகரமான சமூக உருவாக்கத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இந்தப் பத்திரிகையின் இலக்காகும்.

இலங்கையில் அடக்குமுறைக்குள்ளான தமிழ்மக்களின் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை ஈழநாதம் முழுமையாக அங்கீகரிக்கின்றது. அத்தோடு தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழருக்கென ஒரு நாடு அமைக்கப்படுவதே வழியெனவும் ஈழநாதம் கருதுகின்றது.

மேலும், விடுதலைப் போராட்டத்துடன் இணைந்ததாக முன்னேற்றகரமான ஏற்றத்தாழ்வற்ற வாழ்க்கையை மக்களுக்கு வழங்கக்கூடிய சமூக மாற்றம் ஒன்றைத் தோற்றுவிக்கக்கூடிய கருத்துக்களை மக்கள் மத்தியில் உருவாக்குதலும் ஈழநாதத்தின் நோக்கமாகும். அத்தோடு அந்தச் சமூகம் ஊழலற்ற சமூகமாக வளர்ச்சியடைய வேண்டும் என்பதை ஈழநாதம் தனது கருத்திற் கொண்டுள்ளது.

இவற்றை இலக்குகளாகக் கொண்டுள்ளமையால், தமிழரின் வரலாறு, பொருளாதாரம், கல்வி, அபிவிருத்தி, கலாசாரம் போன்ற சகல அடிப்படை அம்சங்களிலும் ஈழநாதம் கவனம் செலுத்துகின்றது.

எவ்வாறு ஈழநாதம் இலங்கையில் அடக்குமுறைக்கு எதிரான குரலாகச் செயற்படுகின்றதோ சர்வதேச நோக்கிலும் அதே நோக்கினையே ஈழநாதம் கொண்டுள்ளது இதில் எவ்வளவிலும் ஈழநாதம் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகவே ஒலிக்கின்றது.

சுருக்கமாகக் கூறின், யாழ்குடா நாட்டின் ஒரு மூலையில் நிகழும் சாதி ஒடுக்குமுறையில் இருந்து அமெரிக்கஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் வரை ஈழநாதம் ஒரே கருத்தையே கொண்டுள்ளது இதில் அடக்கப்பட்ட மக்களின் குரலாகவும், அடக்குமுறையாளர்களின் எதிரான குரலாகவும் ஈழநாதம் செயற்படுகின்றது.

இந்த நோக்கங்களைக் கொண்ட ஈழநாதம் கடந்த ஒரு வருட காலத்தில் பல்வேறு அரசியல் இராணுவ, பொருளாதார தடை நடவடிக்கைகள் மத்தியிலும் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் கண்டுள்ளது எனக் கருதுகிறோம்.

இதனை கடந்த ஒரு வருட காலத்தில் மக்கள் எமது பத்திரிகைக்கு அளித்துவரும் ஆதரவில் இருந்து நாம் கண்டு கொண்டுள்ளோம். இது எமக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுப்பதாகவுள்ளது.

இந்நிலையில் முன்னர் போலவே மக்கள் எமது செயற்பாட்டிற்கு வழங்கிய ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் வழங்குவார்கள் என எதிர்பார்ப்பதோடு கடந்தகாலத்தில் அவர்கள் எமக்கு வழங்கிய ஆதரவிற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

# வவுனியாவில் இராணுவத்தால் 10 பொதுமக்கள் கொலை

(வவுனியா)

வவுனியாவில கடந்த வாரம் அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல்களில் சுமார் பத்துப் பொதுமக்கள் கொலைப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது

பலர் காயமடைந்துள்ளனர் ஏராளமான பொதுமக்கள் இராணுவத்தினரால கைது செய்யபபட்டு காணாமல் போயுள்ளனர்.

இராணுவத்தினர் பொது மக்களின பல வீடுகளை தீ வைத்து எரித்துள்ளனர்.

இராணுவத்தினரின் இத் தாக்குதலின்போது மாணிக்க வளவு பகுதியில் அடையாளம் காணப்படாத நிலையில் ஓர் ஆணினதும், பெண்ணினதும் சடலங்கள் காணப்பட்டன.

கடந்த 12-ஆம் திகதிநொச்சி மோட்டையில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட நெடுங்கேணி சேனைப்புலவு பகுதியைச் சேர்ந்த அம்பலவாணர் சிற்றம்பலம் என்ற இளைஞர் இராணுவத்தினரால சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தவிர வவுனியா குழுமாட்டுச்சந்தி பகுதியில் உள்ள இரு அரிசி ஆலைகளைக் குண்டுவைத்துத் தகர்த்த இராணுவத்தினர் அங்குநின்ற ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்து டயர் போட்டு எரித்து விட்டுச் சென்றுள்ளனர். எரிந்து கருகிய நிலையில் காணப்படும் இச் சடலம் அடையாளம் காணப்பட முடியாத நிலையில் இருக்கின்றது.

நடேஸ் இராசதுரை (43) ஆனைக்கோட்டை, மத்தையா தனபாலசிங்கம் (40) ஒதியமலை, நெடுங்கேணி கே கண்ணன் (24) பேயாடி கூழாங்குளம் வவுனியா, ராமு (35) பேயாடி கூழாங்குளம் வவுனியா, சுந்தரம் (40) பேயாடி கூழாங்குளம் வவுனியா, தம்பிராசா (50) பேயாடி கூழாங்குளம் வவுனியா, பொன்னம்பலம் அருணகிரி (24) வீமன்காமம் ஆகியோர் இராணுவத்தினரால் கடந்தவார நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்படாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

# பருத்தித்துறை இறங்குதுறை திருத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதி முழுமையாக திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இத்துறைமுகத்தின் ஐம்பது வீதமான பகுதிகளுக்கே கடந்த மாதம் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. தற்போது மீதமுள்ள பகுதிகளையும் திருத்தி அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது

இந்த இறங்குதுறைப் பகுதி முழுமையாக திருத்தி அமைக்கப்பட்டால் ஒரே சமயத்தில் பல கப்பல்களில் இருந்து சரக்குகளை இறக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க)

# தட்டச்சு, கல்லச்சிற்கு வடக்கே வரத் தடை

(யாழ்ப்பாணம்)

தட்டச்சு மற்றும் கல்லச்சு இயந்திரங்கள் வடபகுதிக்கு எடுத்து வரப்படுவதை சிறிலங்கா கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் தடை செய்துள்ளது

மேற்படி தடை நடவடிக்கையால் வடபகுதியில் உள்ள பல அரச திணைக்கள அலுவலகங்களுக்கு தேவையான தட்டச்சு, கல்லச்சு இயந்திரங்களை எடுத்துவர முடியவில்லை என்று அரச அலுவலகங்கள் பலவற்றின் அதிகாரிகள் தெரிவித்தனர். தற்போதுகைவசமுள்ள மேற்படி இயந்திரங்களில பல திருத்த முடியாதவாறு பழுதடைந்தமையால் அலுவலக வேலைகளை துரிதமாக செய்து முடிப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர். (க)

# தமிழ் மக்களின் 300 மாடுகள் ஊர்காவற்படையால் திருட்டு

வந்தாறுமூலையில் 300மாடுகள் திருடிச்செல்லப்பட்டுள்ளன. சில தினங்களுக்குமுன்பாக முஸ்லிம் ஊர்காவற்படையைச் சேர்ந்தவர்களால் தமிழர்களுக்குச் சொந்தமான 300 மாடுகள் திருடிச் செல்லப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

# கடன் மீளச் செலுத்தாதோருக்கு விவசாயக் கடன இல்லை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி, மக்கள் வங்கிகள் மூலம் ஏற்கனவே கடன்களைப் பெற்றுத் திருப்பிச் செலுத்தாதவர்களுக்கு இவ்வாண்டுக்கான விவசாயக் கடன்கள் எதுவும் வழங்கப்பட மாட்டாதென்று மேற்படி வங்கிகளின் முகாமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

இவ்வாண்டுக்கான அவசர கால உப உணவு உற்பத்திக்கான கடன் வழங்கலின்போது மேற்படி நடைமுறை கடைப்பிடிக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது. (க)

# கொலம்பியாவில் கார்க்குண்டு; 15 பேர் பலி; 40 பேர் காயம்

(பகோட்டா)

கொலம்பியாவில் மெகலீன் நகரத்தில் கார்க்குண்டுவெடித்ததில் குறைந்தது 15 பேர் இறந்துள்ளனர். 60பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பெருமளவுவாகனங்களும் சேதமடைந்தன. போதை மருந்து கடத்தற்காரர்கள் இந்தக் கார்க்குண்டு வெடித்தசம்பவத்திற்குக் காரணமாக இருப்பர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

1987 இல் இருந்து அரசாங்கத்தின் போதைமருந்து எதிர்ப்புக்கொள்கையை எதிர்த்து இந்தக்கடத்தற்காரர்கள் இவ்வறான நடவடிக்கையிலீடுபட்டுவருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மூன்றாம் நபர் காப்புறுதி வடபகுதியில் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் மூன்றாம் நபர் காப்புறுதித் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் மூன்றாம் நபர்காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்து கொள்வதற்கு வடபகுதி காப்புறுதிக் கூட்டுத்தாபன அலுவலகங்கள் மறுத்து வருகின்றன.

இதனால் இப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (க)

## மண்ணெண்ணெய் விலையில் உயர்வு

கொழும்பில் நிலவுகின்ற மண்ணெண்ணெய் கொள்வனவு கட்டுப்பாடுகள் காரணமாகவும் போக்குவரத்து சீர்ன்மையாலும் நடைமுறையிலுள்ள மண்ணெண்ணெயின் கட்டுப்பாட்டு விலையில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது என யாழ். வர்த்தகசங்கம் அறிவித்துள்ளது. இதன்படி மொத்த விலை ஒரு லீற்றர் 38 ரூபாவாகவும் சில்லறைவிலை ஒருலீற்றர் 40 ரூபாவாகவும் அமைகின்றது.

இப்புதிய கட்டுப்பாட்டு விலை தற்காலிக மானதே. பொதுமக்கள் இச்சிரமத்தைப் பொறுத்துக்கொள்ளுமாறும் நிலைமை சீரடைந்ததும் முன்னைய கட்டுப்பாட்டு விலை மீளவும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் யாழ.மாவட்ட வர்த்தகர் சங்கம் வேண்டுகோள் விடுகின்றது.

## தினமும் பத்து 'பரா' வெளிச்சம்

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து தினமும் பத்துக்கு மேற்பட்ட பரா வெளிச்சம் அடிக்கப்பட்டு வருகிறது.

இதே வேளை இடையிடையே ஷெல் வேட்டுகளும் குடிமனைகளை நோக்கி தீர்க்கப்பட்டு வருவதால், குடிமனைகள் வெடி ஒலியால் நடு நிசியிலும் அதிர்ந்த வண்ணம உள்ளன அயற்கிராம மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியும் உள்ளனர். (லோ)

## பேச்சுக்கள் நடத்த இஸ்ரேல் விருப்பம்

(டெல்அவிவ்)

பாலஸ்தீனப் பிரச்சினை குறித்து அரபு நாடுகளோடு பேச்சு நடத்துவதற்கு டெல் அவிவ் தயாராக இருப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது

நேற்று முன்தினம் டெல் அவிவில் தொலைக்காட்சி மூலம் உரையாற்றிய இஸ்ரேலிய பிரதமர் இர்ஷாக் சமீர் இதனைத் தெரிவித்தார்.

வளைகுடாப் போருக்குப் பின்னர் அரபு நாடுகளோடு அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த தாம் விருப்பம் கொண்டிருப்பதாகவும், பேச்சுவார்த்தைக்கான பாதையில் இறங்குவதற்கு முன்னர் வளைகுடாப் போர்குறித்து முடிவு காணப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# கொர்ப்பசேவ், தாரிக் அஸீஸ் நம்பிக்கையுடன் உள்ளனர்

(மொஸ்கோ)

வளைகுடாவில் தரை மார்க்கத் தாக்குதலை தவிர்ப்பது சம்பந்தமாக சோவியத் அதிபர் மிஹையில் கொர்ப்பசேவும், ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸும், கிரெம்ளின் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர். தாரிக் அஸீஸ் இதற்கு முன்பாக சோவியத் வெளிவிவகார அமைச்சருடனும் வளைகுடா பிராந்தியம் தொடர்பான சோவியத் விசேட தூதுவர் பிலிமத் கோவ்வுடனும் பேச்சு நடாத்தினார்

கொர்ப்பசேவுடன் சுமார் ஒருமணி நேரம் தாரிக் அஸீஸ் பேச்சு நடாத்தியபோதும் இரு தலைவர்களுமே செய்தியாளர்களி ம் எதையும் தெரிவிக்கவில்லை. இவர்கள் நம்பிக்கையுடன் காணப்பட்டதாக மாஸ்கோவிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை குவைத்திலிருந்து ஈராக் வாபஸ் பெறும் என்று ஈராக்கிய புரட்சிகர தலைமைப்பீடம் அறிவித்ததை தொடர்ந்து இராணுவ நிலைப்பாடுகள் பற்றியே இரு தலைவர்களும் ஆராய்ந்து வருவதக பிரான்ஸ் செய்தித் தாபனம் ஒன்று கூறியுள்ளது.

## விசர்நாய் கடியைத் தடுக்க சுகாதார நிலையம் ஈடுபாடு

விசர்நாய் கடியினால் ஏற்படும் மரணங்கள் கடந்த ஆண்டைப்போல இவ்வாண்டும் தொடர்வதால் இதற்கான தடுப்பு நடவடிக்கையில் பிராந்திய சுகாதார சேவைகள் நிலையம் ஈடுபட்டுள்ளது.

விசர் நாய்கடி தடுப்பு மருந்து பற்றாக்குறையினால் சில குறிப்பிட்ட மருத்துவமனைகளில் மட்டுமே தடை ஊசி போடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

யாழ்; போதனா மருத்துவமனை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, பூநகரி, சங்கானை அரசினர் வைத்தியசாலை, கிளிநொச்சி சாவகச்சேரி, தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசலை ஆகியவற்றிலேயே இத் தடுப்பு ஊசி போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நகனகசபை தெரிவித்தார், (க,

தமிழக

அத்துடன் நிகழ இருக்கும் தேர்தலில் இந்திரா காங்கிரஸ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், ஜனதாதள் எஸ். ஆகியவை அடங்கிய கூட்டணியின் வெற்றிவாய்ப்புக்களை அதிகரிப்பது குறித்தும், இடங்களைப் பகிர்ந்து கொள்வது குறித்தும் செல்வி ஜெயலலிதாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவர் தெரி தெரிவித்தார்.

மக்கள் எதிர்க்கும்

ராய்ட்டர் வெளியிட்டசெய்தி தவறானது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தாம் கூறியதாக வெளிவந்த பத்திரிகைச் செய்திகளைக் கண்டு வியப்படைந்ததாக கூறியிருக்கும் பிரதமர் சந்திரசேகர் இந்திய மக்கள் விரும்பினால் மட்டுமே எரிபொருள் நிரப்பும் வசதி நிறுத்தப்படும் எனவும் சொன்னார்.

நய்ளுகு

உணவு மற்றும் பழக்கப்பட்ட சூழல் கிடைக்காமையால் அலைந்து திரிந்தமை, மற்றும் நாய்களின் செவிப்புல எல்லை மனிதனிலும்விட அதிகமாக இருந்தமையால் சிறிலங்காப் படைகளின் வெடிகுண்டுகள் வெடிக்கும்போது ஏற்படும்ஒலி பலமடங்கு அதிகமாக நாய்களின் செவிப்புலன்களால் உணரப்படும் சமயங்களில் நாயின் மூளையின் பல பகுதிகள் பாதிக்கப்பட்டு நாய்க்கு விசர் ஏற்பட்டு விடுகின்றது என்றும் தற்போது இப்பகுதிகளில் உலாவும் நாய்களில் 75 வீதத்திலும் அதிகமானவை இவ்வாறு மூளை பாதிக்கப் பட்டவை என்றும் இந்தவைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வருடத்தில் ஜூன் மாதத்தின் பின்னர் மட்டும் 33 பேர் வரை விசர்நாய் கடியினால் யாழ் மாவட்டத்தில் இறந்துள்ளனர் என்பதும் இந்த ஆண்டு இதுவரை இரண்டுபேர் இவ்வாறு இறந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு 300 ரூபா சம்பள உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கு மாதாந்த சம்பளம் 300 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளதுடன் வருடத்தில் 21 நாட்களுக்கு சம்பளத்துடன் லீவும் வழங்கப் பட்டுள்ளது.

★ 1990ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல 300 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

★ வருடத்தில் 7 நாட்கள் சமயோசிதலீவு, 14 நாட்கள் மருத்துவ லீவு வழங்கப்படும்.

★ புகையிரதப்படி வழங்கப் படமாட்டாது.

★ தொலைக்கல்வி. தொழில் சார்விருத்திப் பயிற்சி போன்றவற்றில் மூன்று ஆண்டுகள் பயிற்சி வழங்கப்படும்,

பயிற்சி வழங்க போதனாசிரியர்கள் தெரிவு

★ யாழ். மாவட்டத்தில் 30 போதனாசிரியர்கள் தெரிவு செய்யப்படுவர்.

★ போதனாசிரியர் பதவிகளுக்கு பயிற்றப்பட்ட பட்டதாரிகள், அல்லது பத்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத் திகதி மார்ச் மாதம் 10ஆம் திகதி ஆகும்.

★ கல்வி நிர்வாக சேவையில் இருப்பவர்கள் விண்ணப்பிக்க முடியாது (க)

வெருகல்

பட்ட இராணுவத்தினர் வெருகல் அணைக்கட்டிற்கு வரும் போது விடுதலைப்புலிகளால் அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இம்மோதலில் ஏற்பட்ட சேத விபரம் எதுவும் தெரியவரவில்லை.

பலாலி ஷெல

படுகாயமுற்ற நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் வீடும் பலத்த சேதமடந்சது ஊரிக்காட்டில் வீழ்ந்துவெடித்த ஷெல்களினால் குறிப்பிடும்படியான சேதங்கள் எதுவும் ஏற்பட்டதாக தகவலில்லை;

அச்சுவேலிப் பகுதியில் 8 ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் அச்சுவேலி மகாவித்தியாலயக் கட்டடம், பாடசாலை ஆய்வுகூடம், கிறிஸ்தவ பாதிரியாரின் வாசஸ்தலம் மற்றும் ஐந்து வீடுகள் என்பன சேதமடைந்தன. இதில் தோலகட்டி வயாவிளானில் இருந்து இடம்பெயர்ந்துவந்த யோ றொபேட் (25) என்பவர் காயமடைந்துள்ளார்.

(செ.தமை), (85), (மு)

காசநகரில்

ஒரு வயது மட்டுமே நிரம்பிய விஜயா என்பவர் தனது கைகளில் ஒன்றை இழந்துள்ளார் மற்றைய பிள்ளையான சந்திரமோகன் (வயது 6) என்பவர் காலில் ஒன்றை இழந்துள்ளார். இத் தாக்குதலில் வியாவில் பாடசாலையும் சேதமடைந்துள்ளது. (க) (85)

## மண்எண்ணெய் பிடிபட்டது

பதுக்கப்பட்டிருந்த மண் எண்ணெய் மீட்கப்பட்டது; கொட்டடியில் சுகந்தன் என்பவரால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த மண்எண்ணெய் தமிழீழ விடுதலைப் புலிகளால் நேற்றிரவு மீட்கப்பட்டதாக தெரியவருகிறது.

ஆண்டு 6

தெரிவித்திருப்பதாக நேற்றுக் காலை கொழும்பிலிருந்து திரும்பிய கல்விப் பணிப்பாளர் தகவல் வெளியிட்டார்

கொழும்பில் தாம் கலந்து கொண்ட பணிப்பாளர்கள் கூட்டம் பற்றியும் அங்கு தாம் கேட்டுக்கொண்ட விடயங்கள் பற்றியும் செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்கையில் புலமைப் பரீட்சை முப்பதாம் திகதி நடைபெற்று அதில் வெற்றிகண்டால் ஏப்ரல் மாதம் முதல் வாரத்திலேயே நிச்சயமாக 1990ஆம் ஆண்டுக்கான உயர்தர சாதாரண தர பரீட்சைகள் நடைபெறும் என்றார்.

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் சாதாரண தரத்தில் பரீட்சை எழுதக்கூடிய மனோநிலையை இழந்த மாணவர்கள் உடனடியாக பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பிக்கவும் என்றும் அவர் விபரம் தெரிவித்தார். (லோ)

## யாழ். இந்துவில் நாகலிங்கம் நினைவுச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி இடம்பெறும் நாகலிங்கம் நினைவுச் சொற்பொழிவு எதிர்வரும் 21 2-91 வியாழக்கிழமை அன்று குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ச. ...னம் அவர்கள் 'யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரம்-புதியநோக்கு' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார் இந்த நிகழ்ச்சிக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் என்று நூற்றாண்டு விழாச் சபையின் தலைவரான அதிபர் திரு க. சி குகதாசனும், விழாக்குழு செயலாளர் இ. மகேந்திரனும அறியத்தந்துள்ளனர். (விளம்பர இல B/2 46)

யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்க ...நாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ... திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### இரண்டாம் உலகப்போரின்பின்

## பெரிய டாங்கி யுத்தத்திற்கு அரேபிய பாலைவனம் தயார்

சவூதிஅரேபியா, குவைத் எல்லைகளின் அருகேஉள்ள விஸ்தாரமான பாலைவனப் பிரதேசம் இரண்டாம் உலகப் போருக்குபின்னர் நடக்கும் மிகப் பெரும் ''டாங்கிகள்'' போருக்கான போர்க்களமாக மாற்றப்படுகின்றது என சி. என். என். செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான டாங்கிகள், பீரங்கிப்படைகள்பாலைவனப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் முப்படைகளும் தயார்நிலையில் இருப்பதாகவும் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## மொஸ்கோ பேச்சுக்களில் நம்பிக்கையில்லை - ஜேம்ஸ்பேகர்

(வாஷிங்டன்)

''ஐ. நா. சபையினால் அறிவிக்கப்பட்ட லட்சியக் குறிக்கோள்களை சோவியத் யூனியன் மதித்து நடக்கும் என்றுதான் நம்புவதாக'' அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் அறிவித்துள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஜோர்ஜ்புஷ் மொஸ்கோப் பேச்சுவார்த்தை பற்றிக் குறிப்பிடும் போதே இவ்வாறு தெரிவித்தார்,

அத்துடன் ஈராக்கிய ஜனாதிபதி சதாம்ஹுசைனைபதவியில் இருந்து நீக்கி விடவே வேண்டும் என்றும் அவ்வாறு நடவடிக்கை எடுத்தாலே வளைகுடாப் பிரச்சினை முடிவடையும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ்பேகர் ''மொஸ்கோ பேச்சுவார்த்தைகளில் வாஷிங்டனுககு நம்பிக்கை ஏதும் இல்லை'' எனத்தெரிவித்தார்

## 33-ஆம் நாள் போர்

★ இஸ்ரேலிய அணு உலை ஒன்றின்மீது கடந்த சனிக்கிழமையன்று ஈராக் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டது முதல் முறையாக ஈராக் தனது நெடுந்தொலைவு ஏவுகணையான ''ஹிஜிராவை'' பயன்படுத்தியதாக ஈராக்கிய இராணுவ அறிக்கைகள் தெரிவித்தன.

★ சவூதி அரேபியா மீதும் ''அல்குசைன்'' ஏவுகணைகள் நேற்றுமுன்தினம் ஈராக்கால் மேற்கொள்ளப்பட்டன; சேத விபரங்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

★ ஈராக்மீது லேசர்மூலம் செலுத்தப்பட்ட குண்டு ஒன்று திசைமாறிச் சென்று ஈராக்கில் குடிமக்கள்வாழும் பகுதியான யலூஜாவில் விழுந்தது என பிரித்தானிய விமானப்படைகள் ஒப்புக்கொண்டுள்ளன.

★ அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளின் நான்கு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஈராக் அறிவித்துள்ளது.

★ வளைகுடாவில், வியட்நாமைவிட கடுமையான அனுபவங்களை அமெரிக்கா பெறுமென பாலஸ்தீன விடுதலை அமைப்பின் அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

★ உலக முஸ்லிம்களின் மிகப் பெரிய எதிரி அமெரிக்காவே என பாகிஸ்தானிய ஆளும் கட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்

★ ''ஈராக்கின் சமாதான முயற்சிகளை ஏற்க அமெரிக்கா மறுத்தால் போர் தொடுப்பதைத்தவிர வேறு வழியில்லை'' என்று ஈராக்கிய வெளியுறவுத்துறை அமைச்சர் தாரிக்அஸீஸ் தெரிவித்தார்.

★ ஈராக்கில் இரவில் விமானத் தாக்குதலும் பகலில் மயான அமைதியும் நிலவுவதாக அங்கிருக்கும் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

★ கடலில் மிதந்த கண்ணிவெடியில் சிக்கி அமெரிக்காவின் இரண்டு போர்க்கப்பல்கள் நாசமடைந்ததாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர். மேலும் தரைப்படை, கடல், விமானத் தாக்குதல்களில் கூட்டுப் படைகளுக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்தியிருப்பதாக ஈராக் அறிவித்துள்ளது

## சிப்பாய் காலை இழந்தார்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவச்சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கி தமது காலை இழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சாகாமம் காட்டுப்பகுதிக்கு சிறிலங்கா இராணுவத்தினர் செல்கையில் அங்கு விடுதலைப்புலிகள் வைத்த மிதிவெடியில் சிக்கி ஒரு சிப்பாய் தமது காலை இழந்துள்ளார். (மு

## சாமியார்மீது வன்முறை

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமிஆலயத்திற்கு முன்பாக உள்ள வைரவர் கோயிலில் சாத்திரம் சொல்பவர் நேற்றிரவு இனந்தெரியாதோரால் நையப் புடைக்கப்பட்டார். தாக்குதலினால் பலத்தகாயங்களுடன் சாத்திரியார் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரு அதிகாரிகள்

தினர் காயமடைந்ததாகவும், இதில் எட்டுப் பேரின் நிலை படுமோசமாக இருப்பதாகவும் அந்த வானொலி அறிவித்தது.

## பணமாக ஒய்வூதியம்

1990ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்திற்கான சகல ஓய்வூதியங்களும் இலங்கை வங்கி யாழ். பிரதான கிளை (ஆஸ்பத்திரிவீதி) வங்கியில் 18ஆம் திகதிமுதல் 21ஆம் திகதிவரை பணமாக வழங்குவதற்குஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என வங்கியின் பிரதான முகாமையாளர் தெரிவிக்கின்றார்.

## பயணிமீது அசுத்த நீர் வீச்சு

கொழும்பிலிருந்து வந்த பயணி ஒருவர்மீது இராணுவம் அசுத்தநீர் அபிஷேகம் செய்துள்ளது.

வவுனியா நகரப்பகுதியில் மறைந்திருந்த இராணுவத்தினர் அந்த வழியே வந்தபயணி ஒருவர் மீது அசுத்த நீரை வீசியதாக தெரியவருகிறது: ஆடைகளை மாற்றும் அவகாசம் இல்லாமல் சிலமைல்கள் வரை பயணத்தை அந்தப் பயணி அதே கோலத்தில் தொடரவேண்டி ஏற்பட்டதாம்;